**<u>கடையநல்லூர் நகர்மன்றத்தின் சாதரணக்கூட்டம்– 2018ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது.</u>**

**<u>பொருள் எண்– 1</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னைஅவர்களின் அவர்களின் கடித ந.க.எண்.47718/2013/UGSS-2 நாள்.14.092018 தெரிவித்துள்ள படியும் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் தெரிவித்துள்ளபடியும், நகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து கட்டிடங்களில் சேகரமாகும் கழிவு நீரினை பதப்படுத்தி Fecal sludge and septage management திட்டத்தின் கீழ் சுத்திகரிப்பு செய்து விவசாய பயன்பாட்டிற்கு பயன்படுத்த தேவையான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சிக்கு சொந்தமான 8 ஏக்கர் பரப்பளவு கொண்ட புதிதாக போகநல்லூர் உரக்கிடங்கில் 40KLD அளவில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மொத்த மதிப்பீட்டுத்தொகை **ரூ.400.00** இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதியும் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்து தர கேட்டு தயார் செய்யப்பட்டுள்ள திட்ட பிரேரணைக்கு அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

1. அங்கீகரிக்கலாம்.
2. Fecal sludge and septage management திட்டத்தின் கீழ் புதிதாக போகநல்லூர் உரக்கிடங்கில் 40KLD அளவிலான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் **(FSTP)** அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு உரிய நிர்வாக அனுமதியும் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்து தர கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் திட்ட பிரேரணை அனுப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 4026/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 210</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 2</u>**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ8/2704/2017 நாள்.29.10.2017ம் தேதிய நிர்வாக அனுமதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018ன் கீழ் கீழ்காணும் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| வ.எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி 32வது வார்டு 5வது தெருவில் ஒரு போர்வெல் சிறுமின் விசை தொட்டி அமைத்தல் பணிக்கு | ரூ.2.00 /– |

மேற்காணும் பகுதியில் பணிகளை மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் துவங்கிய நிலையில் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் ஆட்சேபணை தொடர்ந்து தெரிவித்து வந்ததால் அப்பணிகள் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் பரிந்துரையின் பேரில் மேற்காணும் பணிக்கு மற்றாக கீழ்காணும் விபரப்படி உள்ள பணிக்கு திருநெல்வேலி, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகாம் அவர்களின் செயல்முறை ஆணையில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத்தொகை ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி 32வது வார்டு 4 வது தெரு மத்திய பகுதியில் (ரகுமானியாபுரம் தென்வடல் தெரு) போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேன்க் அமைத்தல் பணிக்கு. | ரூ.2.00 /– |

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018ன் கீழ் பரிந்துரை செய்யப்பட்ட பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களுக்கு முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருப்பதை கருத்திற் கொண்டு அவசர அவசியம் கருதி இந்நகராட்சி தனி அலுவலர் 22.08.2018 அன்று முன் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 3327 /2017/இ1)**

**<u>தீர்மானம் எண். 211</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 3</u>**

இந்நகராட்சி பகுதியில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் (kfw) கீழ் பகிர்மான குழாய்கள் அனைத்து தெருக்களிலும் பதிக்கப்பட்டு பணிகள் முடிவடைந்து சேதமான சாலைகள், பதிக்கப்பட்ட பகிர்மான குழாய்களில் வீட்டு இணைப்புகளை மாற்றியமைத்ததால் சேதமான சாலைகள் மற்றும் மழை போன்ற இயற்கை இடர்பாடுகளால் முற்றிலும் சேதமுற்ற சாலைகளை கணக்கீட்டு கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் கி.மீ ல் | அகலம் மீட்டரில் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.26 மேலக்கடையநல்லூர் மேற்கு மலம்பாட்டை சாலை செயினேஜ் அளவு 1.20 கி.மீ முதல் 4.00 கி.மீ வரை தார்சாலை அமைக்கும் பணி. | 2.800 | 5.00 மீ | 137.40 |
| 2 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் பழைய உரக்கிடங்கு முதல் நகராட்சி குடிநீர் தலைமைப்பணிடத்தை இணைக்கும் இணைப்பு சாலை தார்சாலை அமைக்கும் பணி. | 3.250 | 4.50 மீ | 178.00 |
| 3 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண். 25 கற்பகசுந்தரவிநாயகர் கோவில் தெரு, வார்டு எண். 33 கொழும்பு தெரு, வார்டு எண். 13 ஆசாத் தெரு, வார்டு எண்.22 இந்திரா நகர் புதிய காலனி தென்வடல் தெரு, வார்டு எண்.29 மதினாநகர் பிரதான தெரு மற்றும் வடக்குத் தெரு, வார்டு எண்.24 மாதாங்கோவில் தெரு, வார்டு எண்.25 பஜனைமடம் தென்வடல் தெரு, வார்டு எண்.6 முத்தாரம்மன்கோவில் தென்வடல் தெரு மற்றும் வார்டு எண்.27 தெற்கு ரத வீதி ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணிகள் | 3.495 | 4.00 மீ முதல் 6.00மீ வரை | 168.10 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.18(ம)20 அய்யாபுரம் தெற்குத்தெரு, வார்டு எண்.20 அட்டக்குளம் தெரு, வார்டு எண். 19 (ம) 20 பெரியதெரு, வார்டு எண்.16(ம) 20 புதுத்தெரு, வார்டு எண்.15 பரசுராமபுரம் வடக்குத்தெரு, வார்டு எண்.9 சிந்தாமதார் பள்ளிவாசல் தெரு, வார்டு எண்.5 கிருஷ்ணன்கோவில் தெரு, வார்டு எண்.14 அல்லி மூப்பன் தென்வடல் தெரு மற்றும் வார்டு எண்.1 குமந்தாபுரம் ஆதிதிராவிடர் தென்வடல் தெரு ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணிகள் | 3.225 | 4.00 மீ முதல் 6.00மீ வரை | 170.20 |
| 5 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண். 2 மிட்டா ஆபிஸ் தெரு, வார்டு எண். 32 ரகுமானியாபுரம் தென்வடல் தெரு, வார்டு எண். 28 (ம) 31 அழகுமகுதணன் தென்வடல் தெரு, வார்டு எண். 30 ரைஸ்மில் தெரு, வார்டு எண். 21 காளியம்மன்கோவில் தென்வடல் தெரு, வார்டு எண்.11 தந்தை பெரியார் தெரு, வார்டு எண். 12, 13 (ம) 14 குசவன் குன்று தென்வடல் தெரு, வார்டு எண்.11 பிள்ளையார் கோவில் தென்வடல் தெரு, வார்டு எண்.3 வ.உ.சி தெரு மற்றும் வார்டு எண்.4 செவல்விளைத்தெரு ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணிகள் | 3.905 | 4.00 மீ முதல் 5.00மீ வரை | 172.25 |
| 6 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண். 31 காதர் மைதீன் பள்ளிவாசல் தெரு, வார்டு எண்.10 காளியம்மன் கோவில் தென்வடல் தெரு, வார்டு எண். 17 புதூர் பள்ளிக்கூடம் தென்வடல் தெரு, வார்டு எண். 7 சேனையர் தெரு, வார்டு எண். 9 இல்லத்தார் வடக்குத் தெரு , வார்டு எண். 10 பள்ளிவாசல் தென்வடல் தெரு , மாவடிக்கால் மந்தை தென்வடல் தெரு, வார்டு எண்.11 மாவடிக்கால் சுடுகாடு ரோடு, வார்டு எண்.17 முப்புடாதியம்மன் கோவில் தெரு, வார்டு எண்.12 கல்வத்நாயகம் தெரு , வார்டு எண்.13 அல்லி மூப்பன் தெரு, வார்டு எண். 19 கலந்தர் மஸ்தான் தெரு மற்றும் வார்டு எண்.18 பெண்கள் பள்ளிக்கூடம் தெற்குத் தெரு ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணிகள் | 3.292 | 4.00 மீ முதல் 7.00மீ வரை | 174.05 |
| | **மொத்தம்** | **19.967** | | **1000.00** |

மேற்காணும் சாலை பணிகளை பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி செய்ய வேண்டியுள்ளதால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் **(IUDM)-2018–19** ன் கீழ் சிறப்பினமாக கருதி அரசு மானியமாக சிறப்பு நிதி பெற்று மேற்காணும் சாலை பணிகளை செய்திட தயார் செய்யப்பட்டுள்ள திட்ட பிரேரணைக்கு அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

1. அங்கீகரிக்கலாம்.
2. மேற்காணும் சாலை பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் **(IUDM)-2018–19** ன் கீழ் சிறப்பினமாக கருதி அரசு மானியமாக சிறப்புநிதி பெற்று மேற்காணும் சாலை பணிகளை செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் அனுமதி பெற திட்ட பிரேரணை அனுப்பிட நடிவடிக்கைகள் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 3937 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 212</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 4</u>**

இந்நகராட்சி குடிநீர் பிரிவில் இயங்கும் டேங்கர் லாரி எண்.TN72X8285 வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு மேற்படி வாகனத்தின் பழுதுகளை ரூ.45,000/–(நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) உத்தேச மதிப்பீட்டில் நீக்கம் செய்ய தனி அலுவலர் அவர்கள் 19.07.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், மேற்படி பணிக்கு 20.08.2018 அன்று தகுதிப் பெற்ற பணிமனைதாரரிடம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீஜெயராம் மோட்டார்ஒர்க்ஸ்,<br>55A, தென்காசி ரோடு,<br>அம்பாசமுத்திரம்– 627401. | ரூ.44850/– |
| 2. | ஸ்ரீனிவாசா மோட்டார் ஒர்க்ஸ்.<br>திலகபுரம் மெயின் ரோடு,<br>அம்பாசமுத்திரம்– 627401. | ரூ.45650/– |

வரப்பெற்ற மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் **ரூ.44850/–** கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட ஸ்ரீஜெயராம் மோட்டார்ஒர்க்ஸ், 55A, தென்காசி ரோடு, அம்பாசமுத்திரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு மேற்படி வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்வதற்கு அங்கீகாரத்திற்காக

மேலும் குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 20.08.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.2817 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 213</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 5</u>**

இந்நகராட்சி தலைமை பணியிடத்தில் உள்ள 35.00HP Squirral Gage Induction Motor மற்றும் 35.00HP Sub Motor Voltage Variation காரணமாக Motor Coil எரிந்து பழுதாகி இயக்க முடியாத நிலையில் உள்ள 2 மோட்டாரினை ரூ.1,60,000/– உத்தேச மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்து நிறுவும் பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சி தனி அலுவலர் 02.08.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் மேற்க்கொள்ள தகுதி பெற்ற

ஒப்பந்தக்காரர்களிடம் 02.08.2018 அன்று நேரடியாக விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு. K.S. அப்துல் மாலிக்,<br>(பவர்ஏஜெண்ட்),<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | ரூ.2,77,441/– |
| 2 | திரு. G. முருகன்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | ரூ.2,82,922/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. K.S.அப்துல் மாலிக் (பவர்ஏஜெண்ட்), என்ற ஒப்பந்தக்காரர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு இந்நகராட்சி தலைமை பணியிடத்தில் உள்ள 35.00HP Squirral Gage Induction Motor மற்றும் 35.00HP Sub Motor Voltage Variation காரணமாக Motor Coil எரிந்து பழுதடைந்த நிலையிலுள்ளதை பழுது நீக்கம் செய்து பொருத்தும் பணிக்கு அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

திட்ட பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி இந்நகராட்சி தனி அலுவலர் 02.08.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.4696 /2017/இ1)**

**<u>தீர்மானம் எண். 214</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–6</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் மினி ஆட்டோ எண்.TN76 B1222 வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு மேற்படி வாகனத்தின் பழுதுகளை ரூ.57815/–(ஐம்பத்து ஏழாயிரத்து எண்ணூற்றி பதினைந்து மட்டும்) உத்தேச மதிப்பீட்டில் நீக்கம் செய்ய தனி அலுவலர் அவர்கள் 20.08.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், மேற்படி பணிக்கு 10.09.2018 அன்று தகுதிப் பெற்ற பணிமனைதாரரிடம் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| **வ.எண்** | **ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம்** | **ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்** |
|---|---|---|
| **1.** | மூஸா இஞ்னியரிங் ஒர்க்ஸ்,<br>194, செங்கோட்டை ரோடு,<br>தென்காசி– 627811 | **ரூ.57815/–** |
| **2.** | நடராஜன் மோட்டார் ஒர்க்ஸ்.<br>1ஏ, பழைய பஸ்டான்ட் ரோடு,<br>தென்காசி. | **ரூ.63230/–** |

1. வரப்பெற்ற மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் ரூ.57815/– கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட மூஸா இல்னியரிங் ஒர்க்ஸ், 194, செங்கோட்டை ரோடு, தென்காசி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு மேற்படி வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்வதற்கு அங்கீகாரத்திற்காக.

2. மேலும் பொது சுகாதார அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 10.09.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 2779/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 215</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–7</u>**

இந்நகராட்சி வருவாய் மற்றும் குடிநீர் தலைப்பு நிதியின் கீழ்காணும் பணிகளை மேற்க்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகைக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி – வாரசந்தை வளாகத்தில் கிழக்கு நுழைவாயில் வடக்கு பகுதியில் உள்ள கிழக்கு வரிசையில் வணிக கடைகள் கட்டும் பணிக்கு. | ரூ.9.80/– |
| 2. | கடையநல்லூர் நகராட்சி – வாரசந்தை வளாகத்தில் கிழக்கு நுழைவாயில் வடக்கு பகுதியில் உள்ள மத்திய வரிசையில் வணிக கடைகள் கட்டும் பணிக்கு. | ரூ.9.80/– |
| 3. | கடையநல்லூர் நகராட்சி – வாரசந்தை வளாகத்தில் கிழக்கு நுழைவாயில் வடக்கு பகுதியில் உள்ள மேற்கு வரிசையில் வணிக கடைகள் கட்டும் பணிக்கு. | ரூ.9.80/– |
| 4. | கடையநல்லூர் நகராட்சி – பெரியாற்று படுகையில் உள்ள 50KVA ஜெனரேட்டர் அறை பழுதடைந்து இடிந்த நிலையில் உள்ளதை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிதாக அறை அமைத்து மீண்டும் பொருத்தும் பணிக்கு. | ரூ.4.80/– |
| 5. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் குடிநீர் விநியோக மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி (7.00இலட்சம் லிட்டர்) வளாகத்தினை சுற்றி (மேற்குபக்கம்) பாதுகாப்பு சுவர் கட்டும் பணிக்கு. | ரூ.9.80/– |

மேற்காணும் பணிக்களுக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்க் கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

இந்நகராட்சியின் வருவாயினை அதிகரிக்கும் பொருட்டும் மற்றும் குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியத்தை கருத்திற்கொண்டு இந்நகராட்சி தனிஅலுவலர் 22.08.2018 அன்று முன்அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டதற்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.3503 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 216</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 8</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் மினி ஆட்டோ எண்.TN76P9311 வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு மேற்படி வாகனத்தின் பழுதுகளை ரூ.32,900/–(முப்பத்தி இரண்டாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) உத்தேச மதிப்பீட்டில் நீக்கம் செய்ய தனி அலுவலர் அவர்கள் 20.08.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், மேற்படி பணிக்கு 10.09.2018 அன்று தகுதிப் பெற்ற

பணிமனைதாரரிடம் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | மூஸா இஞ்னியரிங் ஒர்க்ஸ்,<br>194, செங்கோட்டை ரோடு,<br>தென்காசி– 627811 | **ரூ.32900/–** |
| 2. | நடராஜன் மோட்டார் ஒர்க்ஸ்.<br>1ஏ, பழைய பஸ்டான்ட் ரோடு,<br>தென்காசி. | **ரூ.37300/–** |

1. வரப்பெற்ற மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் ரூ.32900/– கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட மூஸா இல்னியரிங் ஒர்க்ஸ், 194, செங்கோட்டை ரோடு, தென்காசி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு மேற்படி வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்வதற்கு அங்கீகாரத்திற்காக.
2. மேலும் பொது சுகாதார அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 10.09.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 2882/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 217</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–9</u>**

கடையநல்லூர் நகராட்சி 2016–2017ம் ஆண்டுக்கான ஆண்டு கணக்கு (வருவாய்மூலதனநிதி, குடிநீர்நிதி மற்றும் கல்வி நிதிக்கான கணக்குகள்) அனைத்தும் இயல்புநிலைபடி முடித்தும் தணிக்கை சமர்பித்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளதற்கு பட்டயக்கணக்கர் சமர்பித்துள்ள தொகை ரூ.30000/–க்கு தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று மேற்படி தொகை வழங்கியதற்கும் இசைவு வழங்கலாம் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 4467/2018/பி1)**

**<u>தீர்மானம் எண். 218</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–10</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் மினி ஆட்டோ எண்.TN76 P9292 வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு மேற்படி வாகனத்தின் பழுதுகளை ரூ.31300/–(முப்பத்தொராயிரத்து முந்நூறு மட்டும்) உத்தேச மதிப்பீட்டில் நீக்கம் செய்ய தனி அலுவலர் அவர்கள் 20.08.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், மேற்படி பணிக்கு 10.09.2018 அன்று தகுதிப் பெற்ற பணிமனைதாரரிடம் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | மூஸா இஞ்னியரிங் ஒர்க்ஸ்,<br>194, செங்கோட்டை ரோடு,<br>தென்காசி– 627811 | **ரூ.31300/–** |

| | | |
|---|---|---|
| 2. | நடராஜன் மோட்டார் ஒர்க்ஸ்.<br>1ஏ, பழைய பஸ்டாண்ட் ரோடு,<br>தென்காசி. | ரூ.34800/– |

1. வரப்பெற்ற மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் ரூ.57815/– கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட மூஸா இல்னியரிங் ஒர்க்ஸ், 194, செங்கோட்டை ரோடு, தென்காசி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு மேற்படி வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்வதற்கு அங்கீகாரத்திற்காக
2. மேலும் பொது சுகாதார அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 10.09.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 2779/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 219</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 11</u>**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கும் TN76A 2283 ஈப்பு வாகனத்திற்கு ரூ.36000/– உத்தேச மதிப்பீட்டில் MRF டயர்கள் 5 எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.142 நாள்.24.05.2018 அன்ற அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் தகுதிப் பெற்ற நிறுவனங்களிடம் 15.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனதாரரின் பெயர் (ம) முகவரி | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (MRF டயர் ஒன்றிக்கு) |
|---|---|---|
| 1. | பாப்புலர் டயர்ஸ்<br>173/B1 யூனியன் அலுவலகம் அருகில்,<br>கடையநல்லூர். | ரூ.7000/– |
| 2. | சன் டயர்ஸ்,<br>903, யூனியன் அலுவலகம் அருகில்<br>மெயில் ரோடு,<br>கடையநல்லூர். | ரூ.7200/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள பாப்புலர் டயர்கள், 173/B1 யூனியன் அலுவலகம் அருகில், கடையநல்லூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொண்டு TN76A 2283 ஈப்பு வாகனத்திற்கு புதிய MRF டயர்கள் வாங்கி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

ஆ) அலுவலக பணியின் அவசர அவசியத்தை கருத்திற் கொண்டு இந்நகராட்சி தனி அலுவலர் 15.06.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் ஈப்பு வாகனத்திற்கு புதிய டயர் விநியோகம் செய்யும் பணிக்கு வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1408/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 220</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–12</u>**

இயக்குநர், கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவன கடித எண்.359/2017/அ2, நாள்.01.02.2018ம் தேதி கடிதத்தில் 2017–18ம் ஆண்டுக்கு கடையநல்லூர் நகராட்சியில் பங்குத் தொகை ரூ.50,000/– செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட தொகை செலுத்த மன்ற அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 3541/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 221</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–13</u>**

கடையநல்லூர் நகராட்சியில் துடைப்பாளராக பணிபுரிந்து 12.08.2018 அன்று மரணமடைந்த திரு.பண்டாரம், துடைப்பாளர் என்பவரின் சிறப்பு சேமநல நிதி சந்தா மற்றும் அதற்கான வட்டிதொகையினை தனக்கு வழங்க கேட்டு அன்னாரின் வாரிசுதாரான திரமதி. P.திருச்செல்வி, கோரியுள்ளார்.

எனவே திரு.பண்டாரம் துடைப்பாளர் என்பவரின் உரிய சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2960/– அதற்கான வட்டித் தொகை ரூ. 4796/– ஆக மொத்தம் ரூ.7756/–(ரூபாய் ஏாயிரத்து ஏழு நூற்றி ஐம்பத்தி ஆறு மட்டும்) அன்னாரின் மனைவி திரமதி. P.திருச்செல்வி, என்பவருக்கு வழங்க இசைவு வேண்டப்படுகிறது .

**(ந.க.எண். 2339 /2018/D1)**

**<u>தீர்மானம் எண். 222</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 14</u>**

இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ்காணும் பணிகளை மேற்க்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகைக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.23 நாடார் வடக்கு தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு. | ரூ.4.80/– |
| 2. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.23 நாடார் தெற்கு தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு. | ரூ.4.90/– |
| 3. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.24 கட்டி விநாயகர் கோவில் தென்வடல் தெருவிலிருந்து மேற்கே செல்லும் பழுதடைந்த வாறுகாலினை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு. | ரூ.6.00/– |
| 4. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.8 முத்துகிருஷ்ணாபுரம் பெரிய தெரு தெற்கு பகுதியில் பழுதடைந்த வாறுகாலினை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு. | ரூ.4.98/– |
| 5. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.8 முத்துகிருஷ்ணாபுரம் பெரிய தெரு வடக்கு பகுதியில் பழுதடைந்த வாறுகாலினை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு. | ரூ.4.98/– |
| 6. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.24 மாரியம்மன் கோவில் மேலத் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு. | ரூ.6.00/– |

| | | |
|---|---|---|
| 7. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.2 கற்பக சுந்தர விநாயகர் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு. | ரூ.6.00/– |
| 8. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.24 மதாங்கோவில் தென்வடல் தெரு வடக்கு தெருவில் மற்றும் வார்டு எண்.26 வடகத்தியம்மன் கோவில் தென்வடல் தெரு மேலபாளையம் இந்து நடுநிலைபள்ளிக்கு வடபுறம் பழுதடைந்த வாறுகாலினை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு. | ரூ.6.00/– |
| 9. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.33 மேற்கு மலம்பாட்டை பகுதியில் பழுதடைந்த வாறுகாலினை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக மழைநீர்வடிகால் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு. | ரூ.6.00/– |

மேற்காணும் பணிக்களுக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்க் கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 3335 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 223</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–15</u>**

மாவட்ட ஆட்சியர் திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், மாலைமலரின் தொழில் மலர்–2018ல் புத்தக வடிவில் 10.09.2018 அன்று வெளியிட உள்ளதால் இந்நகராட்சியில் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018 மற்றும் 2018–2019ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை புத்தக வடிவில் 10.09.2018 அன்று வெளியிட உள்ளதால் வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை வழங்குமாறு கேட்டுகொண்டுள்ளனர். அதனடிப்படையில் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018 மற்றும் 2018–2019ம் ஆண்டுகளில் நடைபெற்ற மற்றும் நடைபெறவிருக்கும் வளர்ச்சிப் பணிகள் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை மாலைமலரின் தொழில் மலர்–2018ல் புத்தக வடிவில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், அரசு திட்ட விளம்பரமாக இருப்பதாலும், அவசரஅவசியம் கருதி மாலைமலரின் தொழில் மலர்–2018ல் புத்தக வடிவில் விளம்பரம் செய்ய 05.09.2018 அன்று தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் தொழில் மலர்–2018ல் புத்தக வடிவில் விளம்பரம் செய்ய நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.3699/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 224</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–16</u>**

மாவட்ட ஆட்சியர் திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, தினதந்தி நாளிதழ் ஆயுத பூஜையை முன்னிட்டு தொழில் மலர்–2018 வெளியிட உள்ளதால் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018 மற்றும் 2018–2019ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை வழங்குமாறு கேட்டுகொண்டுள்ளனர். அதனடிப்படையில் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018 மற்றும் 2018–2019ம் ஆண்டுகளில் நடைபெற்ற மற்றும் நடைபெறவிருக்கும் வளர்ச்சிப் பணிகள் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை தினதந்தி நாளிதழின் தொழில் மலர்–2018ல் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியால், அரசு திட்ட விளம்பரமாக இருப்பதாலும், அவசரஅவசியம் கருதி தினதந்தி நாளிதழின் தொழில் மலர்–2018ல் விளம்பரம் செய்ய 05.09.2018 அன்று தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி வழங்கியுள்ளதன்

அடிப்படையில் மேற்காணும் தொழில் மலர்–2018ல் விளம்பரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.3965/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 225</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–17</u>**

கடையநல்லூர் நகராட்சியில் அட்டவணையில் கண்ட இந்நகராட்சி தனிஅலுவலர் முன்அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு 06.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | நகர்மன்றத் தீர்மானம் எண்/ நாள் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **பொது நிதி –2017–18** | | | | |
| 1. | இந்நகராட்சி தலைமை பணியிடத்துக்கு (Head works ) புதிய 125KVA ஜெனரேட்டர் வாங்கி நிறுவும் பணிக்குவாங்கி நிறுவும் பணிக்கு. | இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.115. நாள்–02.04.2018 | ரூ.9.00/– | செந்தூர் லைட்ஸ்,<br>அஸ்வின்எலக்ரிக்கல்ஸ் & ஹார்டுவேர்ஸ், | 0.01 % குறைவு<br>0.13% அதிகம் |
| 2. | இந்நகராட்சி தலைமை பணியிடத்துக்கு (Head works) புதிதாக அமைக்கும் 125KVA ஜெனரேட்டருக்கு பிளாட்பார்ம், மேற்கூரை அமைத்து மின்பணிகள் மேற்க்கொள்ளும் பணிக்கு. | இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.116. நாள்–02.04.2018. | ரூ.5.00/– | செந்தூர் லைட்ஸ்,<br>அஸ்வின் எலக்ரிக்கல்ஸ் & ஹார்டுவேர்ஸ், | 0.14% குறைவு<br>0.95% அதிகம் |
| 3. | இந்நகராட்சி பெரியநாயகம் கோவில் அருகில் MP நிதியில் கட்டப்பட்டுள்ள கிணற்றிற்கு புதிய 30KVA ஜெனரேட்டர் வாங்கி வாங்கி நிறுவும் பணிக்கு. | இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.113. நாள்–02.04.2018 | ரூ.3.50/– | செந்தூர் லைட்ஸ்,<br>அஸ்வின்எலக்ரிக்கல்ஸ் & ஹார்டுவேர்ஸ், | மதிப்பீட்டு சதவீதம்<br>0.67 % அதிகம் |
| 4. | இந்நகராட்சி பெரியநாயகம் கோவில் அருகில் MP நிதியில் கட்டப்பட்டுள்ள கிணற்றிற்கு புதிதாக அமைக்கும் 30KVA ஜெனரேட்டருக்கு பிளாட்பார்ம், மேற்கூரை அமைத்து மின்பணிகள் மேற்க்கொள்ளும் பணிக்கு. | இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.114. நாள்–02.04.2018. | ரூ.3.00/– | செந்தூர் லைட்ஸ்,<br>அஸ்வின் எலக்ரிக்கல்ஸ் & ஹார்டுவேர்ஸ், | 0.13% குறைவு<br>0.45% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த சதவீதத்தில் உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகாரம் செய்யலாம்.

குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டு இந்நகராட்சி தனிஅலுவலர் 25.07.2018 அன்று முன்அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்காணும் பணிகளுக்கு வேலை உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளபட்டதற்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1055/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 226</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–18</u>**

மாவட்ட ஆட்சியர் திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும் மாலைமுரசு தொழில் மலர்–2018ல் புத்தக வடிவில் வெளியிட உள்ளதால் இந்நகராட்சியில் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018 மற்றும் 2018–2019ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை புத்தக வடிவில் வெளியிட வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை வழங்குமாறு கேட்டுகொண்டுள்ளனர். அதனடிப்படையில் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018 மற்றும் 2018–2019ம் ஆண்டுகளில் நடைபெற்ற மற்றும் நடைபெறவிருக்கும் வளர்ச்சிப் பணிகள் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை மாலைமுரசு தொழில் மலர்–2018ல் புத்தக வடிவில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், அரசு திட்ட விளம்பரமாக இருப்பதாலும், அவசரஅவசியம் கருதி மாலைமுரசு தொழில் மலர்–2018ல் புத்தக வடிவில் விளம்பரம் செய்ய 14.09.2018 அன்று தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் தொழில் மலர்–2018ல் புத்தக வடிவில் விளம்பரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.3936/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 227</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–19</u>**

மாவட்ட ஆட்சியர் திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், தினமணி நாளிதழ் ஆயுத பூஜையை முன்னிட்டு தொழில் மலர்–2018 வெளியிட உள்ளதால் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018 மற்றும் 2018–2019ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை வழங்குமாறு கேட்டுகொண்டுள்ளனர். அதனடிப்படையில் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018 மற்றும் 2018–2019ம் ஆண்டுகளில் நடைபெற்ற மற்றும் நடைபெறவிருக்கும் வளர்ச்சிப் பணிகள் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை தினமணி நாளிதழின் தொழில் மலர்–2018ல் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும்,, அரசு திட்ட விளம்பரமாக இருப்பதாலும், அவசரஅவசியம் கருதி தினமணி நாளிதழின் தொழில் மலர்–2018ல் விளம்பரம் செய்ய 18.09.2018 அன்று தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் தொழில் மலர்–2018ல் விளம்பரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4015/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 228</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–20</u>**

கடையநல்லூர் நகராட்சியில் அட்டவணையில் காணும் கீழ்க்காணும் பணிகளுக்கு இந்நகராட்சி தனி அலுவலர் தீர்மான தீர்மான எண்.178 நாள்.20.08.2018 அன்று அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் **தூய்மை இந்தியா திட்டம்–2018–19 கீழ்** கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு **11.09.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | நகர்மன்றத் தீர்மானம் எண்/ நாள் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **தூய்மை இந்தியா திட்டம்–2018–19** | | | | |
| 1. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் சுடுகாடு வளாகம் (தென்பகுதி) புதிதாக **3TPD Micro compost Processing Centre (MCC)** அமைக்கும் பணிக்கு. | இந்நகர் மன்ற தீர்மான எண்.178 நாள்.20.08.2018 | ரூ.40.00/– | திரு. C.வேலுத்துரை,<br>திரு. M.மாடசாமி, | 0.002% குறைவு<br>0.47% அதிகம் |
| 2. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் கலவை உரக்கிடங்கு வளாகம் அமைந்துள்ள பகுதியில் புதிதாக **3TPD Micro compost Processing Centre (MCC)** அமைக்கும் பணிக்கு. | இந்நகர் மன்ற தீர்மான எண்.187 நாள்.20.08.2018 | ரூ.40.00/– | திரு. M.மாடசாமி,<br>திரு. C.வேலுத்துரை, | 0.01% குறைவு<br>0.55% அதிகம் |
| 3. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 1 குமந்தாபுரம் நடுத்தெருவில் புதிதாக **3TPD Micro compost Processing Centre (MCC)** அமைக்கும் பணிக்கு. | இந்நகர் மன்ற தீர்மான எண்.178 நாள்.20.08.2018 | ரூ.40.00/– | திரு. M.மாடசாமி,<br>திரு. C.வேலுத்துரை, | 0.01% குறைவு<br>0.55% அதிகம் |
| 4. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 20 அட்டக்குளம் ஊரணி கீழ்புறம் புதிதாக **4TPD Micro compost Processing Centre (MCC)** அமைக்கும் பணிக்கு. | இந்நகர் மன்ற தீர்மான எண்.178 நாள்.20.08.2018 | ரூ.45.00/– | திரு.S.சேக்உதுமான் கக்கீம்,<br>திரு.S.சேக்அப்துல்காதர், | 0.04% குறைவு<br>0.22% அதிகம் |
| 5. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.33 மேற்கு மலம்பாட்டை ரோடு, கிருஷ்ணாபுரம். மேற்கு பகுதியில் உள்ள சுடுகாடு வளாகம் அருகேயுள்ள இடத்தில் புதிதாக **3TPD Micro compost Processing Centre (MCC)** அமைக்கும் பணிக்கு. | இந்நகர் மன்ற தீர்மான எண்.178 நாள்.20.08.2018 | ரூ.40.00/– | திரு. APMAகாஜா,<br>திருமதி.P. ஆயிசா, | 0.01% குறைவு<br>0.26% அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.8 சிந்தாமதார் பள்ளிவாசல் தெரு சமுதாய கழிப்பிடம் மேல்புறம் உள்ள இடத்தில் புதிதாக **3TPD Micro compost Processing Centre (MCC)** அமைக்கும் பணிக்கு. | இந்நகர் மன்ற தீர்மான எண்.178 நாள்.20.08.2018 | ரூ.40.00/– | திரு.S.சேக்உதுமான் கக்கீம்,<br><br>திரு.S.சேக்அப்துல்காதர், | 0.01% குறைவு<br><br>0.87% அதிகம் |
| 7. | கடையநல்லூர் நகராட்சி – **தூய்மை இந்தியாதிட்டம் 2018–2019** திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் நகராட்சிப் பகுதிகளில் உற்பத்தியாகும் திடக்கழிவுகளை அந்தந்த வார்டு பகுதிகளிலேயே அமைக்கப்படும் கலவை உரங்கிடங்குகளுக்கு **Micro compost Centre (MCC)** தேவையான சிறிய ரக மூன்று சக்கர (Battery Operated Vehicle) வாகனங்கள் விநியோகம் செய்யும் பணிக்கு | இந்நகர் மன்ற தீர்மான எண்.178 நாள்.20.08.2018 | ரூ.64.80/– | Sharp Systems, Coimbatore.<br><br>Selvaram Enterprises, Tirupur. | 0.56% குறைவு<br><br>0.22% குறைவு |

அ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த சதவீதத்தில் உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகாரம் செய்யலாம்.

ஆ) அரசு திட்டப்பணியாக இருப்பதால் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டும் இந்நகராட்சி தனிஅலுவலர் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் வரிசை எண்.1முதல் 7வரை உள்ள பணிகளுக்கு வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1327/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 229</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–21</u>**

இந்நகராட்சியின் 2017–2018ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தனி அலுவலரின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1539/2018/சி1)**

**<u>தீர்மானம் எண். 230</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–22</u>**

இந்நகராட்சி குடிநீர் பிரிவில் இயங்கும் ஈப்பு எண்.TN76AC1093 வாகனம் 2015ம் ஆண்டு வாங்கப்பட்டு தொடர்ந்து இயங்கி வருகிறது. இந்நிலையில் மேற்காணும் வாகனத்தினை 20000 கி.மீட்டருக்கு ஒருமுறை ஆய்ல்கள் மற்றும் பரிசோதனைகள் செய்யப்பட்டு வரப்படுகின்றது. அதன்படி தற்போது 98920 கி.மீட்டர் ஒடிய நிலையில் மேற்காணும் வாகனத்தினை KODAI Car's(p)LTD திருநெல்வேலி என்ற நிறுவனத்தில் பரிசோதனை மற்றும் ஆயில்கள் மாற்றம் செய்ய 19.07.2018 அன்று கொண்டு செல்லப்பட்டது. அதன் பேரில் மேற்காணும் வாகனத்தினை முழுவதுமாக பரிசோதனை செய்தும் தேவையான உதிரிபாகங்கள் மற்றும் ஆயில்கள் மாற்றம் செய்யப்பட்டதற்கு பட்டியல் தொகை ரூ.56275/யை

வழங்குமாறு பட்டியல் எண்.C1621–25981 நாள்.23.07.2018ன்படி KODAI Car's(p)LTD திருநெல்வேலி என்ற நிறுவனம் சமர்பித்துள்ளது. அதனடிப்படையில் மேற்காணும் நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.56275/– யை வழங்க இந்நகராட்சி தனி அலுவலர் 26.07.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2705/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 231</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–23</u>**

இந்நகராட்சி செயல்படுத்தப்படும் தூய்மை இந்தியா திட்டம் (SBM) 2018-2019 திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் இந்நகராட்சிப் பகுதியிலுள்ள 6 இடங்களில் Micro compost processing Centre (MCC) அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மற்றும் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி அவர்களின் வழியாக தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யவும் அதற்கான செலவினத் தொகைக்கும் அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

அரசு திட்ட பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியவசியம் கருதி இந்நகராட்சி தனி அலுவலர் 28.08.20188 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பர செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவினத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1327/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 232</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–24</u>**

இந்நகராட்சி செயல்படுத்தப்படும் தூய்மை இந்தியா திட்டம் (SBM) 2018-2019 திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் இந்நகராட்சி போகநல்லூர் உரக்கிடங்கில் 10 ஆண்டுகளுக்கு மேல் சேகரமடைந்துள்ள குப்பை கழிவுகளை Biomining முறையில் அப்புறப்படுத்தும் பணிக்கான மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தலைமை செயலகம், சென்னை அவர்களின் வழியாக தகுதியுள்ள நாளிதழ்களில் பிரசுரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அரசு திட்ட பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியவசியம் கருதி இந்நகராட்சி தனி அலுவலர் 28.08.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் பிரசுரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவினத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1327/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 233</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–25</u>**

இந்நகராட்சிப் பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP) 2018-2019 ன்கீழ் தார்சாலை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்12981/2018/இ3 நாள்.17.07.2018 அன்று நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கான மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர் தகவல் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு துறை, தலைமை செயலகம், சென்னை அவர்களின் வழியாக மாநில அளவில் பிரசுரம் செய்யவும் அதற்கான செலவுத்தொகைக்கும் அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

அரசு திட்ட பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியவசியம் கருதி இந்நகராட்சி தனி அலுவலர் 24.09.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் பிரசுரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவினத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1327/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 234</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–26</u>**

கடையநல்லூர் நகராட்சியில் அட்டவணையில் கண்ட இந்நகராட்சி தனிஅலுவலர் முன்அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சி வருவாய் மற்றும் குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு 07.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | நகர்மன்றத் தீர்மானம் எண்/ நாள் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | பொது நிதி –2017–18 | | | | |
| 1. | கடையநல்லூர் நகராட்சி – வாரசந்தை வளாகத்தில் கிழக்கு நுழைவாயில் வடக்கு பகுதியில் உள்ள கிழக்கு வரிசையில் வணிக கடைகள் கட்டும் பணிக்கு. | இந்நகராட்சி தனிஅலுவலர் முன்அனுமதி நாள்–22.08.2018 | ரூ.9.80/– | திரு. APMA காஜா,<br>திருமதி. P.ஆயிசா, | 0.04% குறைவு<br>5.34% அதிகம் |
| 2. | கடையநல்லூர் நகராட்சி – வாரசந்தை வளாகத்தில் கிழக்கு நுழைவாயில் வடக்கு பகுதியில் உள்ள மத்திய வரிசையில் வணிக கடைகள் கட்டும் பணிக்கு. | இந்நகராட்சி தனிஅலுவலர் முன்அனுமதி நாள்– 22.08.2018. | ரூ.9.80/– | திரு. APMA காஜா,<br>திருமதி. P.ஆயிசா, | 0.05% குறைவு<br>5.36% அதிகம் |
| 3. | கடையநல்லூர் நகராட்சி – வாரசந்தை வளாகத்தில் கிழக்கு நுழைவாயில் வடக்கு பகுதியில் உள்ள மேற்கு வரிசையில் வணிக கடைகள் கட்டும் பணிக்கு. | இந்நகராட்சி தனிஅலுவலர் முன்அனுமதி நாள்– 22.08.2018. | ரூ.9.80/– | திரு. APMA காஜா,<br>திருமதி. P.ஆயிசா, | 0.06% குறைவு<br>4.63% அதிகம் |
| 4. | கடையநல்லூர் நகராட்சி – பெரியாற்று படுகையில் உள்ள 50KVA ஜெனரேட்டர் அறை பழுதடைந்து இடிந்த நிலையில் உள்ளதை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதிதாக அறை அமைத்து மீண்டும் பொருத்தும் பணிக்கு. | இந்நகராட்சி தனிஅலுவலர் முன்அனுமதி நாள்– 22.08.2018. | ரூ.4.80/– | திரு. APMA காஜா,<br>திருமதி. P.ஆயிசா, | 0.05% குறைவு<br>2.19% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த சதவீதத்தில் உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்.3503 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 235</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்–27**

**சட்டமன்ற தொகுதி மேம்பபாட்டு திட்டம்–2017–2018ன் கீழ்** கடையநல்லூர் நகராட்சி 32வது வார்டு 4 வது தெரு மத்திய பகுதியில் (ரகுமானியாபுரம் தென்வடல் தெரு) போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேன்க் அமைத்தல் பணிக்கு இந்நகராட்சி தனி அலுவலர் 22.08.2018 அன்று முன் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 07.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளை அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளவர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | டெபாசிட் செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| 1 | திரு.S.R.அமர்நாத்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.05%<br>குறைவு | ரூ.2000/–க்கான TMB Bank D.D.No.801031 நாள்.07.09.2018ன் படி சமர்பித்துள்ளார்.. |
| 2 | திரு.M.மாலையப்பன்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 2.00% அதிகம் | ரூ.2000/–க்கான TMB Bank D.D.No.801032 நாள்.07.09.2018ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.S.R.அமர்நாத், ஒப்பந்தக்காரர், ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். ஆகவே மேற்காணும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.3327/2017/இ1)**

**தீர்மானம் எண். 236**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்–28**

இந்நகராட்சி வருவாய் மற்றும் குடிநீர் தலைப்பு நிதியின் கீழ்காணும் பணிகளை மேற்க்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகைக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.1 குமந்தாபுரம் பகுதியில் பழுதடைந்த வாறுகாலினை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு. | 4.95/– |
| 2. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.5 பள்ளிக்கூடம் தெற்கு தெருவில் பழுதடைந்த வாறுகாலினை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு. | ரூ.4.00/– |
| 3. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.33 மேற்கு மலம்பாட்டை தெற்கு பகுதியில் பழுதடைந்த வாறுகாலினை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக மழைநீர்வடிகால் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு. | ரூ.4.98/– |
| 4. | இந்நகராட்சி அலுவலக கட்டிடங்களை வர்ணம் பூசி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு. | ரூ.6.00/– |
| 5. | இந்நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்காக பராமரிக்கப்படும் 13 எண்ணம் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் சுத்தம் செய்யும் பணிக்கு<br>**( ஒரு ஆண்டிற்கு)** | ரூ.4.98/– |

| | | |
|---|---|---|
| 6. | இந்நகராட்சி பெரியாற்று படுகை தலைமை நீரேற்று நிலையத்தை சுற்றி (கிழக்கு பகுதி) பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிக்கு. | ரூ.9.80/– |
| 7. | இந்நகராட்சிப்பகுதி வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் சுடுகாடு வளாகத்தில் அமைக்கும் புதிய உரக்குடில்களை (MCC) சுற்றி பாதுகாப்பு சுவர் கட்டும் பணிக்கு. | ரூ.9.80/– |
| 8. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.27 சிவாஜி நகரில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு. | 6.00/– |
| 9. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.18 அய்யாபுரம் நடுத்தெருவின் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு. | ரூ.4.00/– |
| 10. | இந்நகராட்சி குடிநீர் விநியோக பணிகளுக்கு பணியாளர்கள் ஒப்பந்தஅடிப்படையில் (Out sourcing) ஒப்பந்ததாரர் மூலம் பணிலமர்த்தும் பணிக்கு. | ரூ.9.80/– |

மேற்காணும் பணிக்களுக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்க் கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 3335/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 237</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–29</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் நேரடி ஆய்வு மற்றும் அறிவுரையில் நிர்வாக நலன் கருதி அலுவலக வளாகத்தினுள் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்த தேவையான நடவடிக்கைகளை மேற்க்கொள்ள தெரிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் இந்நகராட்சி அலுவலக வளாகம் முழுவதும், கீழ்தளம், மேல்தளம் மற்றும் அம்மாஉணவகத்தை சுற்றிலும் கண்காணிப்பு கேமராக்கள் விநியோகம் செய்து பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகைரூ.460000/–க்கு அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3858/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 238</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–30</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17018/2018/குவ–1 நாள்.23.08.2018ன் படி தெரிவித்துள்ளபடி, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2018–19ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34 அறிவிப்பு எண்.14ல் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது என்பதிற்கிணங்க, கடையநல்லூர் நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் 16 இடங்களில் தன்னார்வதொண்டு நிறுவனம் மூலம் பொது கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்று நீரை ஆதாரமாக கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர்சவ்வூடுபரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும் செலவினத்தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம்) வீதம் மொத்தம் 33 இடங்களில் நிறுவுவதற்கு ரூ.594.00 இலட்சம் (ரூபாய் ஐநூற்றி தொன்னூற்று நான்கு இலட்சம் மட்டும்) ஆகும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில் நிறுவனம் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின்

கட்டணத்தை தன்னார்வதொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும் மற்றும் நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே , நகரில் உள்ள 33 வார்டுகளில் உள்ள இடங்களான 1)வார்டு எண்.1 குமந்தாபுரம் வடகாசியம்மன் கோவில் அருகில், 2)வார்டு எண்.2 கோபாலகிருஷ்ணசாமி கோவில் தெரு, 3)வார்டு எண்.3 மங்கம்மா சாலை 4)வார்டு எண்.4 ரேசன் கடை அருகில் 5) வார்டு எண்.5 கிருஷ்ணன் கோவில் அருகில் 6)வார்டு எண்.6 வனத்துறை அலுவலகம் அருகில் 7) வார்டு எண்.7 வாணுவர் பிள்ளையார் கோவில் தெரு 8) உலகா பள்ளி முன்பு 9)வார்டு எண்.9 இல்லத்தார் தெற்கு தெரு 10) வார்டு எண்.10 மாவடிக்கால் மந்தை 11)வார்டு எண்.11 ரயில்வேபீடர் ரோடு(உப்பு குடோன் அருகில்) 12) கல்வத்நாயகன் தெரு(கீழ்பகுதி) 13) வார்டு எண்.13 இக்பால் நகர், 14) வார்டு எண்.14 இரசாலியாபுரம் தெரு, 15) வார்டு எண்.15 பரசுராமபுரம் தெற்கு தெரு, 16) வார்டு எண்.16 புதுத்தெரு கீழ் பகுதி, 17) வார்டு எண்.17 அம்பேத்கார் வடக்கு தெரு18) வார்டு எண்.18அய்யாபுரம் நடுத்தெரு, 19) வார்டு எண்.19 கலந்தர்மஸ்தான் தெரு, 20) வார்டு எண்.20 பெரியதெரு, 21) வார்டு எண்.21 கிருஷ்ணன்கோவில் தெரு 22) வார்டு எண்.22 இந்திராநகர் புதுக்காலணி, 23) வார்டு எண்.23 கிருஷ்ணன்கோவில் அருகில் 24) வார்டு எண்.24 பண்பொழிரோடு 25) வார்டு எண்.25 பஜனைமடம் அருகில் 26) வார்டு எண்.26 மலம்பாட்டை ரோடு 27) வார்டு எண்.27 தெற்கு ரத வீதி, 28) வார்டு எண்.28 சந்தை தெரு, 29) வார்டு எண்.29 மதினாநகர், 30) வார்டு எண்.30 புளியமுக்கு தெரு, 31)வார்டு எண்.31 மலம்பாட்டை ரோடு 32)வார்டு எண்.32 ரகுமானியாபுரம் 5வது தெரு, 33) வார்டு எண்.33 மறுகால் தெரு, ஆகிய இடங்களில் தானியங்கும் குடிநீர் மையங்கள் **(Automatic vending centre)** செயல்டுத்துவதற்கான முன்மொழிவுகளை நகாட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களிடம் அனுமதி பெறவும் அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3997/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 239</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–31</u>**

அரசாணை எண்.37 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.04.2017ன்படி ஒராண்டு காலத்திற்கு எட்டு பரப்புரையாளர்கள் மற்றும் ஒரு மேற்பார்வையாளர் நியமித்திட ஒப்பந்தப்புள்ளி கோரி ஆள் வெளி கொணர்வு முகவை (out source) மூலம் தற்காலிகமாக இந்நகராட்சியில் நியமிக்கப்பட்டுள்ளனர்., நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–5, அவர்களின் 31.07.2018ம் தேதிய ந.க.எண்.26458–1/2016/தி1 உத்திரவில் ஒப்பந்தப்புள்ளி விதிப்படி மேலும் மூன்று மாதங்களுக்கு கால நீட்டிடப்பு அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. இவர்களுக்கான ஊதியத் தொகையை பொது நிதியிலிருந்து வழங்கிடவும் அரசிடமிருந்து நிதி பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது. ஆகவே பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளருக்கான ஊதியத் தொகையினை ஜீலை–2018 முதல் ஆகஸ்ட்–2018 வரையிலான ஊதியத்தை பொதுநிதியிலிருந்து வழங்கியதற்கும், இனிவரும் காலங்களில் பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மற்றும் அரசிடமிருந்து நிதி பெறப்பட்டவுடன் ஈடுசெய்து கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3882/2017/எச்1)**

**<u>தீர்மானம் எண். 240</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**தனிஅலுவலர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**